மலர் : 12 | இயேசுகிறிஸ்துவே கர்த்தர் | இதழ் : 11

TVGM

தனிப்பிரதி ரூ. 3

# HUNDRED VILLAGE MINISTRY

ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

हन्ड्रेड विलेज मिनिस्ट्री

ഹണ്ട്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

## செப்டம்பர் 2012

ஆண்டுசந்தா | இந்தியா ரூ.25 | வெளிநாடு ரூ. 250

# 100- கிராம ஊழியம்

TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர அறிக்கை




**TVGM - 2012 செப்டம்பர்**
**கர்த்தரின் வாக்குத்தத்தம்**

## உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும்.

ஏசாயா 54 : 13





வயலூார் கிராமம் ( கல்பாக்கம் ) ஜெபவீடு 14.07.2012 அன்று தேவனுடைய நாம மகிமைக்கென்று பிரதிஷ்டை செய்யப்பட்டது.

**நன்றி :** *Pastor Viki - Elim Christian Centre, NZ*

# ✷ இயேசுகிறிஸ்துவே கர்த்தர் ✷





**ஸ்டீபன் கிறிஸ்டோபர்**
TASOL ஸ்தாபகர்
**Cell : 94449 80445**
100village@tvgm.org

P.T. **கிறிஸ்டோபர்**
TVGM ஸ்தாபகர்
**Cell : 94435 44628**
jesus100villages@yahoo.com

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளே!

கர்த்தருடைய பெரிதான கிருபையால் TVGM & TASOL ஊழியங்கள் ஆசீர்வாதமாக நடைபெற்று வருகிறது.

**வயலூர் கிராமம்** ( கல்பாக்கம் ) ஜெபவீட்டை 14.07.2012 அன்றும், **பால்கடை கிராமம்** ( ஒட்டன்சத்திரம் ) ஜெபவீட்டை 11.07.2012 அன்றும் பிரதிஷ்டை செய்ய தேவன் கிருபை செய்தார்.

TVGM ஏலீம் சிறுவர் இல்லத்திற்கு **நூலகம்** ஒன்றை கட்டிக் கொடுத்த **சகோ. மைக்கேல்** ( Chiqwell School, U.K )அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் TVGM ஊழியங்களை பார்வையிட்டு எங்களை உற்சாகப்படுத்திய அவருக்கும், அவர் குடும்பத்தினருக்கும் நன்றி!

வரக்கூடிய மாதங்களில் கட்ட இருக்கும் கிராம ஜெபவீடுகளுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

உங்களுக்காகவும், உங்கள் குடும்பத்தினருக்காகவும் நாங்கள் ஜெபிக்கிறோம்.

தேவனுக்கே மகிமை !

**Date : 14.08.12**

கிறிஸ்துவின் பணியில்,
ஸ்டீபன் கிறிஸ்டோபர்.

# உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும்.

## ஏசாயா 54 : 13

**க**ர்த்தருடைய வாக்குத்தத்திற்காக காத்திருக்கும் அன்பான சகோதர, சகோதரியே !

தேவன் இந்த மாதம் உங்களுக்கு கொடுக்கும் வாக்குத்தத்தம்:

**ஏசாயா 54 : 13**

**உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும்.**

இந்த வசனத்தின் பின்னணியை பார்க்கும்போது, ஏசாயா தீர்க்கதரிசி இஸ்ரவேல் தேசத்தை மலடியான ஸ்திரிக்கு ஒப்பிடுகிறார். இஸ்ரவேலர் சில வருடங்கள் கர்த்தரிடத்தில் அவிசுவாசியாயிருந்ததால் ஏசாயா இவ்வாறு ஒப்பிடுகிறார். ஆனால் இந்த அதிகாரத்திலே கர்த்தர் இஸ்ரவேலின் வெட்கத்தை மாற்றி, கனிதரும் மகிழ்ச்சியான எதிர்காலத்தை கட்டளையிட வாக்குத்தத்தம் பண்ணுகிறார். ஆதலால் இந்த அதிகாரம் கர்த்தர் தன் பிள்ளைகளுக்கு ஆறுதலையும், பாதுகாப்பையும் கூறுகிற ஒன்றாக இருக்கிறது.

இன்றைக்கு இந்த அசுத்தமான உலகில் ஒவ்வொரு பெற்றோருக்கும் தன் பிள்ளைகளை குறித்த பயம் இருக்கிறது. தங்கள் பிள்ளைகள் பாதுகாப்பாய் எந்த ஒரு இச்சையிலும் விழுந்து விடக் கூடாது என்ற கரிசனை இருக்கிறது. தங்கள் பிள்ளைகள் ஒழுங்கமாக இருக்கும்போது பெற்றோர் சந்தோஷப்படுகின்றனர். அதற்கு மாறாக பிள்ளைகள் வழிவிலகி நடக்கும்போது பெற்றோர் வருத்தப்படுகின்றனர். ஒவ்வொரு பெற்றோருக்கும் தங்கள் பிள்ளைகளின் வளர்ச்சி ஒரு முக்கிய குறிக்கோளாக இருக்கிறது. உலகப் பிரகாரமான பெற்றோர் தங்கள் பிள்ளை களுக்கு சிறந்த கல்வியும், சிறந்த உணவையும் கொடுத்து அவர்களை சிறப்பான முறையில் வளர்க்க முயற்சிக்கின்றனர். ஆனால் பிள்ளைகள் கர்த்தருக்குப் பயப்படும் பயத்தில் வளர்க்கப் படும்போது அவர்கள் கர்த்தருடைய கட்டளைகளை கைக்கொண்டு அதினால் வரும் சமாதானத்தை பெற்று கொள்வார்கள். அவர்களுடைய சமாதானம் பெற்றோராகிய நமக்கு சமாதானத்தைக் கொடுக்கும். உங்கள் பிள்ளைகளின் சமாதானத்தைக் குறித்து கவலைப் படுகிறீர்களா ? கவலைப்படாதிருங்கள். கர்த்தர் உங்கள் பிள்ளைகளுக்கு பெரிய சமாதானத்தைக் கட்டளையிடுவார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

இயேசுகிறிஸ்து இந்த உலகிற்கு வந்ததின் நோக்கம், மனித குலத்திற்கு சமாதானம் கொடுக்க என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்த சமாதானம் நமக்கு சந்தோஷத்தையும், செழிப்பையும் தரும். இந்த சமாதானத்தை நம் சந்ததி முழுவதும் அனுபவிக்கும்.

**லூக்கா 1:78,79**

“அந்தகாரத்திலும் மரண இருளிலும் உட்கார்ந்திருக்கிறவர்களுக்கு வெளிச்சம் தரவும், நம்முடைய கால்களைச் சமாதானத்தின் வழியிலே நடத்தவும்”

கர்த்தர் நமக்கு இரண்டு விதமான சமாதானத்தை கொடுக்க விரும்புகிறார்.

**1. வெளியரங்கமான சமாதானம்**

**2. உள்ளான சமாதானம்.**

முதலாவதாக, நாம் மற்ற மக்களோடு சமாதானமாய் இருக்க வேண்டும். இன்றைய கால கட்டத்தில் இந்த வெளிப்படையான சமாதானத்தை நாம் குலைத்துப் போடுகிறோம். நம்முடைய கர்வத்தினால் மற்றவர் களோடு சண்டைபோட்டு சமாதா னத்தை இழந்து போகிறோம். நாம் நம்மை சுற்றி இருப்பவர்களோடு சமாதானமாய் இருந்தால் தான் நமக்கு சமாதானம் இருக்கும். எபிரெயர் 12 :14 "யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்." ரோமர் 12 : 18 "கூடுமானால் உங்களாலானமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயி ருங்கள்."

இரண்டாவதாக நமக்கு உள்ளான சமாதானம் வேண்டும். அநேக நேரத்தில் நாம் பிரச்சனைகளை சந்திக்கும்போது நம்முடைய உள்ளான சமாதானத்தை இழந்து போகிறோம். குறிப்பாக நம்முடைய பிள்ளைகள் கர்த்தரின் வழிகளை விட்டு விலகி நடக்கும்போது நம்முடைய உள்ளான சமாதானம் பெரிதும் பாதிக்கப் படுகிறது. இப்படிப்பட்ட நேரங்களில் நாம் கர்த்தரை நம்பி நம்முடைய விண்ணப் பங்களை அவரிடத்தில் தெரிவிக்க வேண்டும். ஏனென்றால் கர்த்தர் மட்டுமே நம்முடைய கவலைகளை சுமக்கக் கூடியவராய் இருக்கிறார். இப்படி செய்யும்போது பிலி.4:6,7ன்படி நமக்கு உள்ளான சமாதானம் கிடைக்கும். "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலி னாலும் தேவனுக்குத் தெரியப்படுத் துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தை களையும் கிறிஸ்து இயேசுவுக்குள் ளாகக் காத்துக் கொள்ளும்."

**நம்முடைய பிள்ளைகள் சமாதானமாய் வாழ நாம் என்ன செய்ய வேண்டும்?**

***1. நம் பிள்ளைகளுக்கு சரியான பாதையை காட்ட வேண்டும்.***

***2. நம் பிள்ளைகளோடு நேரம் செலவழிக்க வேண்டும்.***

***3. நம் பிள்ளைகளுக்கு நாம் எடுத்துக் காட்டாக இருக்க வேண்டும்.***

***4. நம் பிள்ளைகளுக்கு கர்த்தரின் வழிகளை போதிக்க வேண்டும்.***

***5. நம் பிள்ளைகளுக்கு அடிமைத் தனத்தினால் வரும் அபாயத்தை குறித்து எச்சரிக்க வேண்டும்.***

முதலாவதாக, நாம் பிள்ளை களுக்கு சரியான வழிகளை காண்பித்து அவர்களை ஒழுக்கமாக வளர்க்க வேண்டும். **நீதிமொழிகள் 22 : 6** "பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்." ஆம்! நாம் பிள்ளைகளை சிறுவயதிலே சரியான பாதையில் வளர பயிற்சிக்கும் போது அவர்களுடைய வாழ்க்கை சமாதானமாய் இருக்கும்.

இரண்டாவதாக, நாம் பிள்ளை களோடு நேரம் செலவழிக்க வேண்டும். நமக்கு அநேக வேலைகள் இருந்தாலும், நாம் பிள்ளைகளோடு இருக்க நேரத்தை ஒதுக்க வேண்டும். நம்முடைய பிள்ளைகளின் தனிப்பட்ட வாழ்வில் ஆர்வம் கொண்டு அவர்களுடைய பள்ளி – கல்லூரி நிகழ்வுகளில் கலந்து கொண்டு அவர்கள் தேவைகளை புரிந்து, அவர்களோடு சேர்ந்து ஜெபிக்க வேண்டும். கர்த்தர் நம் வாழ்க்கையில் செய்த நன்மைகளை அவர்களுக்கு சொல்ல வேண்டும்.

சங்கீதம் 78 : 4 "பின்வரும் சந்ததியான பிள்ளைகளுக்கு நாங்கள் அவைகளை மறக்காமல், கர்த்தரின் துதிகளையும், அவருடைய பலத்தையும், அவர் செய்த அவருடைய அதிசயங் களையும் விவரிப்போம்." நாம் அதிக நேரம் கர்த்தரைக் குறித்து சொல்லும்போது பிள்ளைகள் கர்த்தரின் வல்லமையை உணர்ந்தவர்களாய் எதற்கும் பயப் படாமல் சமாதானமாய் வாழ்வார்கள்.

மூன்றாவதாக, இயேசுகிறிஸ்து சீஷர்களுக்கும், இந்த உலகத்திற்கும் எடுத்துக் காட்டாய் வாழ்ந்ததுபோல, நாமும் நம் பிள்ளைகளுக்கு எடுத்துக் காட்டாய் வாழ வேண்டும். நம்முடைய பேச்சைக் காட்டிலும் நம் நடக்கை எடுத்துக் காட்டாய் இருக்க வேண்டும். இன்றைக்கு அநேக பெற்றோர் தங்களு டைய தனிப்பட்ட வாழ்க்கையில் குறை வுள்ளவர்களாக காணப்படுகின்றனர். அவர்கள் தவறான எடுத்துக்காட்டாக இருப்பினும் தங்கள் பிள்ளைகள் ஒழுக்கமாக இருக்கவேண்டுமென எதிர் பார்க்கின்றனர். பெற்றோர் தவறுகளை செய்துகொண்டு பிள்ளைகளிடத்தில் ஒழுக்கத்தை எதிபார்ப்பது தவறான ஒன்றாகும்.

நான்காவதாக, நாம் கர்த்தரின் வழிகளை பிள்ளைகளுக்கு போதிக்க வேண்டும். **எபேசியர் 6 4** "பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் அவர் களை வளர்ப்பீர்களாக" ஆகவே நாம் பிள்ளைகளுக்கு கர்த்தரின் வழிகளை போதித்து, பரிசுத்த ஆவியின் கனிகள் நிறைந்த வாழ்க்கை வாழ கற்று கொடுக்க வேண்டும். நம் பிள்ளைகள் பரிசுத்த ஆவியினால் நடத்தப்படும் போது அவர்கள் கர்த்தருக்குப் பயந்து அவருடைய கட்டளைகளை கைக் கொள்வார்கள். அப்பொழுது அவர்கள் சமாதானம் பெரிதாயிருக்கும்.

ஐந்தாவதாக சிற்றின்பங்களுக்கு அடிமைப்பட்டால் வரும் அபாயங்களை குறித்து பிள்ளைகளுக்கு எச்சரிக்க வேண்டும். இன்றைக்கு சாத்தான் அநேக வாலிபருடைய வாழ்க்கையை சீர் குலைத்துக் கொண்டிருக்கிறான். நம் பிள்ளைகள் கர்த்தருக்குப் பயந்து, கீழ்படியும் பிள்ளைகளாக இருந்தால்கூட சில சமயங்களில் போதைக்கும், மற்ற இச்சைகளுக்கும் அடிமையாகின்றனர். ஆகவே இந்த அசுத்தமான காரியங்களை விட்டு விலகி இருக்க பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும். நம் சரீரம் கர்த்தருடைய ஆலயம் என்பதை அவர்களுக்கு போதிக்க வேண்டும். **1 கொரி. 3: 14** "நீங்கள் தேவனுடைய ஆலயமாய் இருக்கிறீர்கள் என்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாய் இருக்கிறாறென்றும் அறியாதிருக் கிறீர்களா ?"

**பக்தன் பாடுகிறார்**

**என் சமாதானம் உனக்கு தருகிறேன்**
**உலகம் தரமுடியாத சமாதானமே**
**உலகம் புரிந்துகொள்ள முடியாத சமாதானமே**
**என் சமாதானம் உனக்கு தருகிறேன்.**

ஆம்! இயேசுகிறிஸ்து மட்டுமே நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் சமாதானத்தை தர முடியும்.

உங்கள் விசுவாசத்தை பின்வருமாறு அறிக்கை செய்யுங்கள்.

**"இயேசுவுக்கு என் பிள்ளைகளை**
**ஒப்புக் கொடுக்கிறேன்.**
**இந்த உலகம் தர முடியாத**
**சமாதானத்தை என்**
**பிள்ளைகளுக்குத் தருவார்."**

**தேவனுக்கே மகிமை!**

**உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும். யோவான் 16:20**

# கலிலேயா முகாம் 2012

## ( மகிழ்ச்சியான நாட்கள் )

நாள் : **2012 அக்டோபர் 5,6,7** வெள்ளி,சனி,ஞாயிறு

இடம் : **கோடாவிளை பஸ் ஸ்டாப்**

( உவரிக்கும் கூடன்குளத்திற்கும் மத்தியில் )

நேரம் : **தினமும் மாலை 6.30 மணிக்கு**

(100 கிராம ஊழியர் சாட்சிகள் சனிக்கிழமை காலை **10 – 1** )

**தேவ செய்தியாளர்:**

## பாஸ்டர் R. ஜாஷ்வா உதயநீதி

( மனம் மாறிய பூசாரி )

யூதா எழுப்புதல் ஊழியங்கள் – மதுரை.

**ஜெபியுங்கள் !**

**முகாம் ஒருங்கிணைப்பாளர்**

**திரு. இரத்தினம் ஆசிரியர்,**

தொலைபேசி : 04637-276306

**திரு. மனோகர் ஆசிரியர்,**

தொலைபேசி :04637-272664

மொபைல் : 94864 81522

சிறுவர் இல்லம் : 04637- 276309

**பங்கு பெறுங்கள் !**

**கிறிஸ்துவின் பணியில்,**

**சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர்** C.E.O

**தமிழ் வில்லேஜ் காஸ்பல் மிஷன்,**

**100 கிராமம், திருச்சி - 620 102.**

Bro.Stephen H/P : **94449 80445**

**ஸ்தாபகர்**

Bro.P.T. **கிறிஸ்டோபர் - 94435 44628**

**பஸ்ரூட்**

1. திருநெல்வேலி மாவட்டம் திசையன்விளையிலிருந்து கோடாவிளை பஸ் ஸ்டாப் வருவதற்கு அநேக மினி பஸ் உண்டு.
2. நாகர்கோவிலிருந்து கூடன்குளம், ஆத்தங்கரை பள்ளிவாசல், நவலடி **கோடாவிளை பஸ்டாப்** வழியாக உவரி, திருச்செந்தூர், தூத்துக்குடி போகும் பஸ்ஸில் ஏறி வரலாம்.

**குறிப்பு : 1. டி.வி.ஜி.எம்** கிராம ஊழியங்களுக்காக உண்டியல், ரசீது புத்தம் வாங்கியிருப்பவர்கள் முகாமிற்கு தவறாமல் கொண்டு வாருங்கள்.

2. **கலிலேயா முகாமில்** 3 நாட்கள் தங்கியிருக்க அனுமதி உண்டு

3. **தனித்தனியாகவும், குடும்பத்திற்காகவும் ஊழியர் ஜெபிப்பார்கள்.**

# சேலம் - அயோத்தியாபட்டணம் யூனியன்
# 100-கிராம ஊழிய அறிக்கை

**தேதி : 16.07.2012 முதல் 20.07.2012 முடிய**




**க**ர்த்தருடைய கிருபையினால் 16.07.2012 திங்கள் முதல் 20.07.2012 வெள்ளி வரை சேலம் மாவட்டம் – **அயோத்தியாபட்டணம்** யூனியனில் **100–கிராம ஊழியம்** ஆசீர்வாதமாக நடைபெற்றது.

முதல்நாள், கடைசி நாள் கூடுமிடம், உணவு, இனிப்பு, பார்சல் செலவுகளை அயோத்தியாபட்டணம் **பாஸ்டர் செல்லையா** அவர்கள் பொறுப்பெடுத்து கொண்டு உதவி செய்தார்கள்.

தமிழ்நாட்டின் பல மாவட்டங்களிலிருந்து **47** கிராம ஊழியர்கள் கலந்துகொண்டு ஊழியம் செய்தார்கள். முதல் நாள் ஜெபத்தில் அயோத்தியாபட்டணம் யூனியனிலுள்ள கிராமங்களின் பெயர்களை வாசித்து ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. இந்த ஜெபத்தில் சேலம் JMHA ஸ்தாபனத்தின் தலைவர் பாஸ்டர் A. ஜோசப் அவர்கள் தேவசெய்தி கொடுத்து ஊழியர்களை உற்சாகப்படுத்தினார்கள். TVGM காரியதரிசி **சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர்** அவர்களும் சில ஆலோசனைகளை கூறி ஜெபித்தார்கள்.




பின்பு கிராம ஊழியர்களை 11 குழுக்களாக பிரித்து, ஒவ்வொரு குழுவினரும் தாங்கள் ஊழியம் செய்யப் போகிற கிராமங்களுக்காக ஜெபித்தார்கள். **பாஸ்டர் செல்லையா** மதிய விருந்து கொடுத்து உபசரித்தார்கள். பின்பு ஊழியர்கள் கிராமங்களுக்குள் கடந்து சென்று **5** நாட்கள் கிடைக்கிற இடங்களில் தங்கிக் கொண்டு, வீட்டிற்கொரு யோவான் சுவிசேஷம் கொடுத்து ஊழியம் செய்தார்கள். மொத்தம் 12,116 யோவான் சுவிசேஷப் புத்தகங்கள், 10,000 **இயேசுவே இரட்சகர்** கைப்பிரதிகள், 5000 மற்ற கைப்பிரதிகள், 10000 சிலுவைக்கொடிகள், 300 **'நம் மத்தியில் வாழ்ந்த அவர்'** புத்தகமும் இலவசமாக வழங்கப்பட்டன. **233** புறமத நண்பர்கள் தபால் மூலம் வேதபாடம் அனுப்ப கேட்டுக் கொண்டார்கள்.



ஊழியங்களை முடித்து 20ம் தேதி இரவு 7 மணிக்கு முன்பு கூடிய சபையிலே கூடி ஜெபித்து கர்த்தர் தங்களை கிராமங்களில் எப்படியாக பயன்படுத்தினார் என்பதை சாட்சியாக சொல்லி தேவனை மகிமைப்படுத்தினார்கள். **பாஸ்டர் செல்லையா** இரவு விருந்து கொடுத்தார்கள். TVGM சார்பில் ஊழியர்களுக்கு பிரயாணப்படி வழங்கப்பட்டது. யாவரும் மகிழ்ச்சியுடன் அவரவர் ஊர்களுக்கு சென்றார்கள்.

## கிராம ஊழியர்களின் அனுபவ சாட்சிகள்

குழு 1 :- **சகோதரி மரியம்மாள்,**
**சகோதரி கிளமெண்ட்ஸ்மேரி,**
**சகோதரி அபியேல் அந்தோணியம்மா,**
**சகோதரி தெபோராள்.**

நாங்கள் வீடுவீடாக யோவான் சுவிசேஷப் புத்தகம் கொடுத்து சத்தியத்தை அறிவித்தோம். அநேக மக்களுடைய பிரச்சனைகள், நோய்கள் நீங்கும்படியாக ஜெபித்தோம். மொத்தம் 1300 சுவிசேஷப் புத்தகங்கள், 940 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

குழு 2 :- **சகோதரி எஸ்தர் கனகாம்புஜம், சகோதரி மரியாள், சகோதரி பாக்கியம், சகோதரி குளோரி கௌரி.**

நாங்கள் சென்ற கிராமங்களில் மக்கள் ஆர்வமுடன் சுவிசேஷப் புத்தகங் களைப் பெற்றுக் கொண்டார்கள். பலர் தங்களுடைய குடும்ப ஆசீர்வாதத்திற் காக ஜெபிக்கும்படி கேட்டார்கள். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 900 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

குழு 3 :- **சகோதரி சாந்தகுமாரி,**
**சகோதரி சாரதா, சகோதரி லீலா,**
**சகோதரி ஏசு தங்கம்.**

நாங்கள் 10 கிராமங்களில் யோவான் சுவிசேஷம் கொடுத்து, இயேசுவை அறிவித்தோம். மக்கள் ஆர்வமுடன் சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டார்கள். நோயாளிகள் எங்களிடம் ஜெபிக்கும்படி கேட்டார்கள். நாங்கள் ஜெபித்தோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 910 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

குழு 4 :- **சகோதரி கஸ்தூாரி சுப்பையா,**
**சகோதரி எஸ்தர் எபிநேசர்,**
**சகோதரி சாந்தி ஸ்டேன்லி,**
**சகோதரி மேரி பாப்பா.**

நாங்கள் சென்ற கிராமங்களில் சத்தியத்தை கூறியபோது மக்கள் அன்போடு ஏற்றுக் கொண்டார்கள். ஒரு சிலர் மட்டும் வேண்டாம் என்றார்கள். கிராமங்களில் நாய்கள் அதிகமாக இருந்தது. கர்த்தர் எங்களை காத்துக் கொண்டார். பிரச்சனைகள், நோய்கள் உள்ளவர்களுக்காக ஜெபித்து சமாதானம் கூறினோம். மொத்தம் 1565 சுவிசேஷப் புத்தகங்கள், 900 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

குழு 5 :- **சகோ. மாற்கு மாரியப்பன்,**
**சகோ. மகாராஜன், சகோ. ராமு,**
**சகோ. செல்வராஜ்.**

நாங்கள் 13 கிராமங்களில் சுவிசேஷத்தை அறிவிக்க கர்த்தர் கிருபை செய்தார். மக்கள் புத்தகங்களை ஆர்வமுடன் வாங்கினார்கள். பலர் எங்களிடம் ஜெபிக்கக் கேட்டார்கள். ஒருவர் மட்டும் எதிர்ப்பு தெரிவித்தார். மொத்தம் 1250 சுவிசேஷப் புத்தகங்கள், 920 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 6 :- சகோதரி மணியம்மாள், சகோதரி லீதியாள், சகோதரி தேவகிருபை, சகோதரி கிருபா பழனியம்மாள், சகோதரி ரெபேக்கா.**

நாங்கள் 11 கிராமங்ளில் வீடுகள் தோறும் யோவான் புத்தகம் கொடுத்து சுவிசேஷம் அறிவித்தோம். மக்கள் ஆர்வமாக கேட்டார்கள். புத்தகங்களை அன்போடு பெற்றுக் கொண்டார்கள். வியாதியஸ்தர், குழந்தைகள், பெரியவர்களுக்காக ஜெபித்தோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 900 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 7 :- சகோதரி அன்னக்கிளி, சகோதரி மெர்சி ராஜ், சகோதரி கவிதா, சகோதரி முத்துலட்சுமி தொற்காள்.**

நாங்கள் சென்ற கிராமங்களில் மக்கள் ஆர்வமுடன் சுவிசேஷப் புத்தகங்களைப் பெற்றுக் கொண்டார்கள். **பள்ளக்காடு** கிராமத்தில் ஒரு பையன் 5 வருடமாக நடக்க முடியாமல் கஷ்டப்பட்டு வந்தான். இவனுக்காக ஜெபிக்கச் சொன்னார்கள். ஜெபித்தபோது எழுந்திருக்க முடியால் இருந்த அந்த பையன் எழுந்து கொஞ்சநேரம் உட்கார்ந்தான். இப்படி அநேக வியாதியஸ்தர்கள் குறிப்பாக கிட்னி பாதிக்கட்டு முகம், கை, கால் வீங்கி இருந்த ஒருவருக்காக ஜெபித்தோம். மொத்தம் 1001 சுவிசேஷப் புத்தகங்கள், 910 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 8 :- சகோ. பிரேம் ஆனந்த், சகோ.ஆசீர்பாண்டி, சகோ. மைக்கேல், சகோ. சவரிமுத்து, சகோ. ஸ்டீபன்.**

**குள்ளம்பட்டி** கிராமத்தில் ஒருவருக்கு சுவிசேஷம் சொன்னபோது அவர் சிறுவயதில் தொட்டிலிருந்த தன் தம்பியை வேகமாக ஆட்டியதில் சுவரில் மோதி மண்டை உடைந்து போனதாகவும், தன் வாலிப வயதில் 20க்கும் மேற்பட்ட நபர்களுக்கு செய்த துரோகத்தையும் சொல்லி இயேசு மன்னிப்பாரா ? என்று கேட்டார். இவருக்கு மன்னிக்கும் இயேசுவைப் பற்றி கூறி ஜெபித்தோம். அவரும் இயேசுவிடம் இன்று இரவில் மன்னிப்பு கேட்பேன் என்று சொன்னார். **நீர்முள்ளிக்குட்டை** கிராமத்தில் சிறு பிள்ளைகளுக்கு ஜுரம் என்று ஜெபிக்க சொன்னார்கள். **குட்டக்காட்டில்** ஏற்கனவே சுவிசேஷம் அறிவித்த ஊழியரை அடித்து விரட்டின குடும்பத்தாரை சந்தித்து சுவிசேஷம் அறிவித்து புத்தகம் கொடுத்தோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 900 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 9 :- சகோ. யோசுவா, சகோ.ஜெபமலைநாதன், சகோ. பீட்டர், சகோ.செல்வராஜ், சகோ.ஸ்டீபன்ராஜ்.**

நாங்கள் கிராமங்களில் சுவிசேஷப் புத்தகங்கள் கொடுத்து அநேகருக்காக ஜெபித்தபோது அசுத்தஆவிகள் விலகி சென்றன. அநேக மக்கள் சுகமடைந்தனர். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 910 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 10 :- சகோ. பால்ராஜ், சகோ. சூசைமாயிக்கம், சகோ.தாஹாகனி, சகோ. ஆபிரகாம்.**

நாங்கள் 5 நாட்கள் கிராமங்களில் உள்ள வீடுகளில் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தோம். யாவரும் ஆர்வத்துடன் வாங்கிக் கொண்டார்கள். அநேக வியாதியஸ்தர்களுக்காக ஜெபிக்க கர்த்தர் உதவி செய்தார். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 925 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

குழு 11 :- **சகோதரி லூாயிஸ் அம்மாள், சகோதரி ஜோதிமணி, சகோதரி தேவ பாக்கியம், சகோதரி கஸ்தூாரி அன்னாள் மாசிநாயக்கன்பட்டி, உடையார் பட்டி** கிராமங்களில் சுவிசேஷம் சொன்ன போது நோயாளிகள் பலர் ஜெபிக்கும்படி கேட்டார்கள். சரவணன் என்பவரின் மனைவிக்கு கை,கால், தலைவலியாக உள்ளது என்றார். நாங்கள் குழுவாக ஜெபித்தோம். உடனே கர்த்தர் அற்புத சுகம் கொடுத்தார். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 885 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**தேவனுக்கே மகிமை !**

**தேவை !**

மாதந்தோறும் கிராமங்களில் குறைந்தபட்சம் 10,000 யோவான் சுவிசேஷப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

**ஒரு சுவிசேஷப் புத்தகத்தின் விலை ரூ.1. 50**

கர்த்தரால் ஏவப்படுகிறவர்கள் தாங்க முன்வாருங்கள்.

**2012 செப்டம்பர் மாத இயேசுவை விரும்புவோர் முகாம்**

மாவட்டம் : இராமநாதபுரம்
யூனியன் : கடலாடி
நாள் : 22.09.2012
நேரம் : காலை 9 மணி

**கூடுமிடம்**

பாஸ்டர் R. ஜோசப்
A.G சர்ச்,
மூக்கையூர் ரோடு,
சாயல்குடி - 623 130
இராமநாதபுரம் மாவட்டம்.
**செல் : 99525 05811**

# கன்னியாகுமரி மாவட்ட TVGM அறிமுகப்பணி அலுவலகம் 2012 ஜூலை மாத ஊழிய அறிக்கை

கர்த்தருடைய அளவற்ற இரக்கத்தினால் ஜூலை மாத ஊழியங்கள் ஆசீர்வாதமாக முடிந்தன. கடந்த மாதங்களில் அறிமுகப்பணி செய்த இடங்களில் தொடர்ந்து ஊழியம் செய்யவும், நல்ல பலன் களைக் காணவும் கர்த்தர் கிருபை செய்தார். தடைகளின் நடுவில் சுவிசேஷ ஊழியம் **நெசவாளர் காலனி** மற்றும் **புத்தேரி** பகுதிகளில் நடைபெற்றன. கூடுதலாக ஊழியர்கள் தேவைப்பட்டதால் அதிக பாரத்தோடு ஜெபித்து வந்தோம். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு புதிதாக ஒரு சகோதரியை ஊழியத்தில் இணைத் துள்ளார்.

தொடர்ந்து புதிய அறிமுகப் பணிகளுக்காக ஜெபித்து முயற்சித்து வருகிறோம். ஜெபமே ஜெயம் !

**தேவனுக்கே மகிமை !**

கிறிஸ்துவின் பணியில்,
N. ஷோபனா இவாஞ்ஜலின்
செல்: **98658 26424**

**TVGM அறிமுகப்பணி அலுவலகம்**
**5 / 3A** கிரவுண் தெரு,
வாத்தியார் விளை,
நாகர்கோவில் – 629 001
போன் : 04652 - 277251

## இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

**உன் ஊழியத்தை நிறைவேற்று.** 2 **தீமோ.** 4 : 5

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு** "**100 - கிராம ஊழியம்**" திட்டத்தின் மூலம் **'வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்'** இலவசமாக வழங்கி **இயேசுவை**அறிவித்தல்.

### திருவாரூர் மாவட்டம் - குடவாசல் யூனியன்

# 100 - கிராம ஊழியம்

**நோக்கம்: 2012 செப்டம்பர் 10** திங்கள் காலை **9** மணி முதல் **செப்டம்பர் 14** வெள்ளி இரவு **10** மணி முடிய **குடவாசல் யூனியன் கிராமப் பகுதிகளில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் இயேசுவை அறிவித்து "**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**" இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம் : 2012 செப்டம்பர் 10** திங்கள் காலை **9 - 1** மணி

**கடைசி நாள் ஜெபம் : 2012 செப்டம்பர் 14** வெள்ளி இரவு **7 - 10** மணி

### உபவாச ஜெபம் நடைபெறும் இடம்

**சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர் -** TVGM
C/o. I.P.A. **ஜெபவீடு**
10A, **மேல ஒகை ரோடு,**
**குடவாசல் - 612 601. திருவாரூர் மாவட்டம்.**
**செல் :** 94425 70064 , 97880 36830

உதவி செய்ய முன்வந்த **பாஸ்டர் போவாஸ் ரவிசந்திரன்** அவர்களுக்கு நன்றி.

**<u>தகுதி</u>** : ஆலயமில்லாத கிராமங்களில் **5** நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த **18** வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**<u>பிரயாணப்படி</u> :** தமிழ்நாட்டிலிருந்து ரூ. **5** செலுத்தி, **அனுமதி தபால்** பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

**<u>முக்கிய அறிவிப்பு</u> :** 1. இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும்.

**எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**

2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.

**<u>சகல தொடர்புகளுக்கும்</u> :** சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர்,
**100 - கிராமம்,** சோமரசம்பேட்டை, திருச்சி - 620 102. **Web: tvgm.org**

**<u>தேவை</u> :** ஒரு மாதம் *10,000* வீடுகளுக்கு சுவிசேஷம் அறிவிக்க ரூ.75000 தேவைப்படுகிறது. கர்த்தரால் ஏவப்படுகிறவர்கள் தாங்க முன்வாருங்கள்.

## இந்திய அரசாங்க சட்டத்தின்படி
## சபை போதகர்கள் பேண வேண்டிய 15 ரிஜிஸ்டர் மாடல்கள்
## அத்துடன் அதனுடைய விளக்கம் DVD - Rs. 150 + கொரியர்

திரு. தாமஸ் ஜெய்சன் ( Mould , சென்னை – செல் : 9940012131 ) அவர்கள் TVGM தலைமை அலுவலகத்தில் 14.06.2012 அன்று நடத்திய பயிற்சியின் நிகழ்ச்சிகள் 150 நிமிடங்கள் வீடியோவாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் சொசைட்டி, டிரஸ்ட் பதிவு செய்ய வேண்டிய அவசியத்தையும், அதன் வழிமுறைகளையும் மேலும் ஒவ்வொரு சபைகளும் பராமரிக்க வேண்டிய 15 ரிஜிஸ்டர் மாடல்களும் அதின் விளக்கங்களும் மிகத் தெளிவாக உள்ளது.

ஒவ்வொரு சபை போதகர்களும் ரூ. 200 /– மணியார்டர் அனுப்பி புரோபோஷனல் கொரியர் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

**மணியார்டர் அனுப்ப வேண்டிய முகவரி :**

**TVGM,100-Village,Somarasampettai, Trichy - 620 1202**

மணியார்டர் கூப்பனில் பணம் அனுப்பும் நோக்கத்தை தவறாமல் குறிப்பிடுங்கள்.

**குறிப்பு :** 1. இரண்டாவது செமினாராக சபை பற்றியதான காரியங்கள் 09.08.2012 அன்று நடத்தப்பட்டது. இதுவும் வீடியோ செய்யப்பட்டுள்ளது.

2. கர்த்தருக்குச் சித்தமானால்,2012 அக்டோபர் மாதம் 4ம் தேதி வியாழக்கிழமை காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை TVGM தலைமை அலுவலகம்– வீரங்கிநல்லூர் ரோடு, சோமரசம்பேட்டையில் ( 3வது செமினாராக ) சபை போதகர்கள் பேண வேண்டிய கணக்குகள் பற்றியும் மற்றும் **2012 ஆகஸ்டு மாதம்** அரசாங்கம் வெளியிட்டுள்ள சட்டத்திட்டங்கள் பற்றியும் விளக்கிக் கூற ஒழுங்கு செய்துள்ளோம். இதுவே எமது கடைசி செமினாராகும்.

3. **பாஸ்டர் பெல்லோஷிப்** நடத்தும் போதகர் மற்றும் **ஸ்தாபன தலைவர்கள்** கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். உங்கள் வருகைப் பற்றி செப்டம்பர் மாதம் 30ம் தேதிக்குள் உங்கள் முழு விலாசம், தொலைபேசி, சபை பெயர் விபரங்களுடன் செல்போன் : **89037 16163** க்கு SMS பண்ணுங்கள். வரவேண்டிய இடம், பஸ் ரூட் யாவும் உங்களுக்கு SMS மூலம் தெரிவிக்கப்படும்.

4. மொத்தம் 100 பேருக்கு மட்டுமே உணவு ஒழுங்கு செய்யப்படுவதால் ஒழுங்கும் கிரமுமாக SMS மூலம் பதிவு செய்து கொள்ளுங்கள்.

5. மற்றும் போதகர் பெல்லோஷிப் நடத்தும் தலைவர்களுக்கு இந்த விளம்பரத்தை தெரிவியுங்கள்.

# தேவனுடைய வார்த்தையை ஆராய்வது

இன்றைக்கு அநேக விசுவாசிகள் கர்த்தருடைய வார்த்தையை எப்படி ஆராய்ச்சி என்று தெரியாமல் போராடுகின்றனர். சிலர் வேதத்தை ஆராய்வது அவசியம் இல்லையென்று எண்ணுகின்றார்கள். தேவனுடைய வார்த்தையை எல்லோரும் ஆராய்ச்சி செய்வது அவசியமாகும். நாம் வேதத்தை புரிந்து கொள்ள நேரத்தை ஒதுக்க வேண்டும். இதைத் தான் கர்த்தர் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார். 1பேதுரு 2 3 "நீங்கள் வளரும்படி புதிதாய் பிறந்த குழந்தைகளைப் போல திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்." மேலும் நாம் கர்த்தருக்குப் பயந்து, அவருடைய வார்த்தையை பற்றிக் கொள்ள வேண்டும். இப்படி செய்வோமானால் கர்த்தர் அவருடைய உடன்படிக்கையை தெரியப்படுத்துவார். சங்.25 14 "கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது. அவர்களுக்கு தம்முடைய உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார்."

**நாம் வேதத்தை ஆராய்ச்சி செய்யும்போது மூன்று காரியங்களை மனதில் கொள்ள வேண்டும்.**

***1. வேதாகம துணைநூல்களை கொண்டு வேதத்தை ஆராய வேண்டும்.***

***2. வேதத்தில் உள்ள ஆவிக்குரிய உண்மைகளை புரிந்து கொள்ள பரிசுத்த ஆவியானவரின் உதவியை நாட வேண்டும்.***

3. கர்த்தர் நமக்கு வெளிப்படுத்தின காரியங்களை மற்றவர்களிடம் பகிர்ந்து கொண்டு அவர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்க வேண்டும்.

முதலாவதாக, கர்த்தருடைய வார்த்தையை சரியான விதத்திலே புரிந்து கொள்ள வேண்டும். நம்முடைய விருப்பத்திற்கேற்ப கர்த்தருடைய வார்த்தையை புரிந்து கொள்ளக் கூடாது. வேதத்தை நம்முடைய இஷ்டத்திற்கு மாற்றாமல், கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கும் ஞானத்தைக் கொண்டு தேவன் என்ன சொல்கிறார் என்பதை சரியாக புரிந்து கொள்ள வேண்டும். சில காரியங்கள் நமக்கு பிடிக்காமல் இருந்தால் வேத வார்த்தைகளை அதற்கேற்றாற்போல மாற்றி புரிந்து கொள்ளக் கூடாது. நாம் வேதத்தை சரியான விதத்திலே புரிந்து கொள்வதற்கு அநேக வழிகள் இருக்கிறது.

கர்த்தருடைய வார்த்தையை புரிந்து கொள்வதற்கு சில வழிகளை பார்ப்போம்.

**◇ நாம் வேத்தை படிக்கும்போது அந்த பகுதியின் பின்னணியை முதலாவது புரிந்து கொள்ள வேண்டும்.**

**◇ நாம் படிக்கும் வேதபகுதியை அல்லது அதிகாரத்தை முழுமையாக படிக்க வேண்டும்.**

**◇ மீண்டும், மீண்டும் வரும் வார்த்தைகளை குறித்து வைத்துக் கொண்டு போன்ற மற்ற சம்பவங்களை வேதத்தில் இருந்து வாசிக்க வேண்டும்.**

**◇ நாம் படிக்கும் ஒவ்வொரு வசனத்திற்கும் வேதாகம துணை நூல்களில் கொடுத்திருக்கும் அர்த்தங்களை பார்க்க வேண்டும்.**

**◇ நாம் படிக்க வேதபகுதியின் சாராம்சத்தை எழுதி வைத்துக் கொள்ள வேண்டும்.**

இரண்டாவதாக, வேதத்தை படிக்கும்போது நாம் பரிசுத்த ஆவியானவரின் உதவியை நாட வேண்டும். பரிசுத்தஆவியின் துணையோடு படிக்கும்போது, வசனத்தின் ஆவிக்குரிய அர்த்தங்களை புரிந்து கொள்ள முடியும். வேத வார்த்தைகள் ஆவியில் எழுதப்பட்டதால் அதை ஆவிக்குரிய கண்களோடு பார்க்க வேண்டும். உலக மனிதன் அதை புரிந்து கொள்ள முடியாது. 1கொரி. 2 : 14 ‘‘ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக் கொள்ளான். அவைகள் அவனுக்குப் பைத்தியமாக தோன்றும். அவைகள் ஆவிக்கேற்றபிரகார காரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்.’’ தேவனுடைய இரகசியங்களை பரிசுத்தஆவியானவரையே சார்ந்திருந்தால் தான் புரிந்து கொள்ள முடியும். 1கொரி. 2 : 10 ‘‘நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார். அந்த ஆவியானவர் எல்லா வற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்து இருக்கிறார்.’’ நாம் வேதத்தை எவ்வளவு அதிகமாக தியானிக்கிறோமோ, அவ்வளவு அதிகமாக நம்முடைய மனம் புதிதாக்கப்படும். ரோமர் 12 : 12 ‘‘நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந் தரியாமல் தேவனுடைய நன்மையும் பிரியமும், பரிபூரணமுமான சித்தம் இன்ன தென்று பகுத்தறியத்தக்கதாக உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.’’

கடைசியாக தேவன் நமக்கு கொடுக்கும் வெளிப்பாடுகளை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டும். நாம் எவ்வளவு அதிகமாக வேதத்தை ஆராய்ச்சி செய்கிறோமோ அவ்வளவு அதிகமாக தேவன் ஆவிக்குரிய காரியங்களை வெளிப்படுத் துவார். நாம் வேதத்தில் இருந்து கற்றுக் கொண்டவைகளை மற்றவர்களுக்கும் சொல்லி கொடுக்க வேண்டும். அப்படி செய்வதின் மூலம் நாம் மற்றவர்கள் வாழ்வில் நல்ல விதைகளை விதைக்கிறோம். 2கொரி. 9 : 6 ‘‘சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறன் பெருக அறுப்பான். ’’ கலாத்தியர் 6 : 8 ‘‘தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திறஜீவனை அறுப்பான்.’’ ஆகவே நாம் மற்றவர்களோடு வெளிப்பாடுகளை பகிர்ந்து கொள்ளும்போது, நாமும் அவர்களிடத்தில் இருந்து அநேக காரியங்களைக் கற்றுக் கொள்ளலாம். நாம் இலவசமாய் பெற்றோம். இலவசமாய் கொடுப்போம்.

நாம் இவ்வாறு கர்த்தருடைய வார்த்தையை ஆராயும்போது தேவன் நம்மை அவருடைய நாம மகிமைக்கென்று பயன்படுத்துவார். சங். 1 : 2 ‘‘கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் பிரிமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.’’

**தேவனுக்கே மகிமை !**

## TVGM சிறுவர் இல்லம் - சோமரசம்பேட்டை

2012 ஜூலை மாதத்தில் TVGM சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்கு சிறப்பு உணவு



வழங்கிய சகோ. வில்சன், சகோதரி ஜரின் பெல்லா, சகோ. இளையராஜா கீதா, சகோதரி பிரசன்னா கல்பனா, சகோ. எட்வின், சகோ. சத்தியமூர்த்தி, சகோ. தைரியராயர், சகோதரி நிஷா, சகோதரி ஜெயரஞ்சினி, கோபால் ஸ்டோர் ( சோமரசம் பேட்டை ) மற்றும் பிள்ளைகளுக்கு **நோட்டு புத்தகங்கள்** வழங்கிய **சகோ.ஜனா** ( திருச்சி ) அவர்களுக்கும் நன்றி கூறுகிறோம்..

## இயேசுகிறிஸ்துவே கர்த்தர்

**துதி,கனம், மகிமை – இயேசுகிறிஸ்துவுக்கே!**

*பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்.*

### விசுவாசிகள் எழுதிய சாட்சிகளின் சில வரிகள்

**சகோ. ராஜசீனியம்மாள், தூத்துக்குடி.**

என் மகள் அனிஸ்சோனியா ஆசிரியர் பயிற்சியில் வெற்றி பெற்றால் 100–கிராம ஊழியம் பத்திரிகையில் சாட்சி எழுதுவதாக பொருத்தனை செய்தேன். மகள் பாஸாகி விட்டாள்.

**சகோதரி தமிழரசி, தூத்துக்குடி.**

என் மகன் +1 பாஸ் பண்ணினால் 100–கிராம ஊழியம் பத்திரிகையில் சாட்சி எழுதுவதாக பொருத்தனை செய்து ஜெபித்தேன். மகன் நல்ல மதிப் பெண்களோடு பாஸாகி விட்டான். **"நான் உன்னிடத்தில் வந்து உன்னை ஆசீர்வதிப்பேன்"** என்ற வாக்குத்தம் என் வாழ்வில் நிறைவேறியது.

**சகோ. பாஸ்கரன், காஞ்சிபுரம்.**

என் பேரன் விஜய் 10 வகுப்பில் தேர்ச்சி பெற்றால் சாட்சி எழுதுவதாக பொருத்தனை செய்து ஜெபித்தேன். நீங்களும் ஜெபித்தீர்கள். பேரன் 350/500 மதிப்பெண்கள் எடுத்து வெற்றி பெற்றுள்ளான்.

**சகோ. அன்பழகன், வேலூர்.**

என் அண்ணன் மனைவிக்காக ஜெபிக்கும்படி கேட்டிருந்தேன். மருத்துவ பரிசோதனையில் இரட்டை குழந்தைகள், பிறப்பது கஷ்டம் என்றார்கள். ஆனால் கர்த்தரின் கிருபையினால் 14.04.2012 அன்று நல்ல முறையில் ஆண் குழந்தைகள் பிறந்தன. தாயும் சேயும் நல்ல சுகத்துடன் இருக்கிறார்கள்.

### புறமதநண்பர்கள் எழுதிய சாட்சிகளின் சில வரிகள்

**சகோ. சேகர், திருவண்ணாமலை.**

என் கடன்பிரச்சனை மாற ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தேன். நீங்கள் ஜெபித்தீர்கள். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டார். இப்பொழுது கடன் தீர்ந்து விட்டது. தேவனுக்கே மகிமை.

**சகோ. இளங்கோ, மதுரை.**

தாங்கள் அனுப்பிய மாதாந்திர பத்திரிகையின் வாக்குத்தத்தத்தை பற்றிக் கொண்டு தேவன் வாக்குத்தத்தை நிறைவேற்ற வல்லவர் என ஜெபித்தேன். கர்த்தர் என் மகளுக்கு பாஸ்போர்ட் கிடைக்க கிருபை செய்தார்.

**சகோதரி கலைமதி, திருவாரூர்.**

எனக்கு அரசாங்க வேலைக்காக ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு அரசாங்க வேலை கிடைக்கும்படி செய்தார். முதல் மாத சம்பளத்தில் காணிக்கை அனுப்பியுள்ளேன். தேவனுக்கே மகிமை.

**பிரியமானவர்களே !**

*இதுபோன்ற நன்மைகளை கர்த்தர் உங்களுக்கும் செய்ய வேண்டுமா ? உங்கள் பிரச்சனை எதுவாயினும் தயங்காமல் எங்களுக்கு ஒரு கடிதம் மூலம் தெரியப்படுத்துங்கள். எங்கள் வெள்ளிக்கிழமை உபவாச ஜெபங்களில் உங்களுக்காக ஜெபிக்கிறோம். கர்த்தர் பதிலளிப்பார்.*

## தினமும் ஒரு நிமிடமாவது ஜெபிப்பீர்களா?

### "இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்". 1தெச. 5:17

## இந்தியாவிற்காக ஜெபியுங்கள் !

**திங்கள் :** நம் தேசத்தின் ஜனாதிபதி, அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மத்திய அமைச்சரவையின் அதிகாரிகளுக் காக ஜெபியுங்கள். மேலும் எல்லா மாநிலங்களின் முதலமைச்சர்கள், மந்திரிகள் மற்றும் மாநில அரசு அதிகாரிகள் யாவரும் தங்கள் பொறுப்புகளை நிறைவேற்றி, தேசத்தின் முன்னேற்றத்திற்காக பாடுபட ஜெபியுங்கள்.

**செவ்வாய் :** நம் நாட்டிலுள்ள கிறிஸ்தவ சபைகள், ஊழியங்கள் மற்றும் மிஷனெரிகளின் தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள். கர்த்தர் கிறிஸ்தவ தலைவர்களுக்கும், ஊழியர்களுக்கும், அவர்களுடைய குடும்பத்தினர் யாவருக்கும் நல்ல பாதுகாவலையும் சுகபெலனையும் கட்டளையிட ஜெபியுங்கள்.

**புதன் :** இந்திய நாட்டில் வாழும் ஒவ்வொரு மனிதனுக்கும் சுவிசேஷம் சொல்லப்பட ஜெபியுங்கள். இயேசுவைப் பற்றி கேள்விபடாத வேதாகமம் இல்லாத அநேக மக்கள் கிராமங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்கள் தங்கள் சொந்த மொழிகளிலே வேதம் வாசிக்க வழிகள் திறக்கப்படவும், இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளவும் ஜெபியுங்கள்.

**வியாழன்:** இந்தியாவிலுள்ள சிறுவர்களும், வாலிபர்களும் இயேசுவைப் பற்றி கொள்ள ஜெபியுங்கள். இன்று அநேக வாலிபர்கள் குடிபழக்கத்துக்கும், போதைக்கும், பாலியல் குற்றங்களுக்கும் அடிமைகளாக வாழ்கின்றனர். இந்த பாவ கட்டுகளிலிருந்து விடுதலை பெறவும், பாவத்தை செய்ய தூண்டும் அசுத்த ஆவிகளை தேவன் கட்டவும் ஜெபியுங்கள்.

**வெள்ளி :** நம் தேசத்தை இயற்கை அழிவுகளுக்கும், தீவிரவாதம் போன்ற பயங்கரங்களுக்கும், கொள்ளை நோய்களுக்கும் தேவன் விலக்கி காக்க ஜெபியுங்கள். நம் இந்திய மக்கள் யாவரும் நல்ல சுகத்துடன் ஒற்றுமையாய் வாழ ஜெபியுங்கள். இதற்கு எதிராக செயல்படும் சாத்தானின் கிரியைகள் முறியடிக்கப்பட ஜெபியுங்கள்.

**சனி :** இந்தியாவில் தான் அதிகமான படிப்பறிவு இல்லாத மக்கள் இருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. ஏழைகள், தாழ்த்தப்பட்டவர்கள், பெண்கள் யாவரும் படிப்பறிவு பெற ஜெபியுங்கள்.

**ஞாயிறு :** நம் நாட்டில் சுமார் 13 கோடி மக்கள் வறுமையில் வாழ்கின்றனர். தினமும் அநேக சிறுவர்கள் உணவில்லாமல் பசியினால் இறந்து போகின்றனர். கர்த்தர் நம் தேசத்தை செழிப்பான நாடாக மாற்ற ஜெபியுங்கள். வறுமையை நீக்க ஞானத்தோடு செயல்படும் பிள்ளைகளை தேவன் எழுப்ப ஜெபியுங்கள்.

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில்
தேவன் பிரியமாயிருக்கிறார். 2 கொரி. 9 : 7

காணிக்கை , பத்திரிகை சந்தா, தபால் அனுப்ப வேண்டிய

**TVGM தலைமை அலுவலக முகவரி**


BRO.STEPHEN CHRISTOPHER C.E.O.

**TAMIL VILLAGE GOSPEL MISSION (TVGM)**

"100-VILLAGE" SOMARASAMPETTAI

TRICHY - 620 102. TAMIL NADU, INDIA.

Ph: 0- 431 - 2607241 Cell : 94449 80445

Email : 100village@tvgm.org Web : www.tvgm.org

Founder : Bro . P.T. Christopher - Cell : 94435 44628


| நோக்கம் | காணிக்கை அனுப்ப வேண்டிய விபரம் |
|---|---|
| **100 கிராம ஊழியம்,** யோவான் சுவிசேஷம், பின்தொடர்பணி, **ஜெபவீடு** கட்டுதல், முழுநேர ஊழியர் மற்றும் வட இந்திய ஊழியங்கள் – கைபிரதிகள், ஆலயம் கட்டுதல் | **Tamil Village Gospel Mission**<br>SB. A/c :**12491010 - 23822** Indian cheque/draft<br>SB. A/c : **12491010 -11947** Foreign cheque/draft<br>**Canara Bank,** Puthur Branch Code 1249, Trichy - 620 017 |
| சிறுவர் இல்ல பிள்ளை–களின் பராமரிப்பு, சிறுவர் இல்ல கட்டிடம், **மருத்துவ நிதி, தையற்மிஷின், தொழுநோயாளர், விதவைகள், பார்வையற்றோர் , ஏழை, எளியவர் உதவி** | **TVGM Social service** ( 80G வரி விலக்கு உண்டு)<br>SB. A/c : **12491010 - 23805** Indian cheque/draft<br>SB. A/c : **12491010 - 24967** Foreign cheque/draft<br>**Canara Bank,** Puthur Branch Code 1249, Trichy - 620 017 |
| **TASOL**<br>**நிலம் வாங்குதல்**<br>**உயர் கல்வி நிதி** | **The Ambassador School of Learning - 80G** வரி விலக்கு<br>SB. A/c : **12491010 - 38110** Indian cheque/draft<br>**Canara Bank,** Puthur Branch Code 1249, Trichy - 620 017 |
| **பத்திரிகை சந்தா**<br>**அச்சகம்** | TVGM Publication<br>SB. A/c : **12491010 - 25265** Indian cheque/draft<br>**Canara Bank,** Puthur Branch Code 1249, Trichy - 620 017 |

**குறிப்பு :** ஸ்தாபனம் பெயரில் காணிக்கைகளை அனுப்ப முடியாவிட்டால் Stephen Christopher S.B. A/c . No : **10848511949** State Bank of India Code : 930 Main Branch, Trichy, India. என்ற பெயரிலும் செக், டிராப்ட் எடுத்து அனுப்புங்கள்


Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher
from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai,
Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers,
C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.

**Editor : Mr. Stephen Christopher**

REG. NEWS PAPER R.N.I. Number : TNMUL / 2000 / 4011
HUNDRED VILLAGE MINISTRY ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி
POSTAL REGISTRATION NUMBER :TRY / 066 / 2012 - 2014
Posting Date 25th at Trichy RMS





TVGM ஊழியங்கள் ஒவ்வொன்றையும் பார்வையிட்டு அலுவலக பணியாளர்களையும், சிறுவர்களையும் உற்சாகப்படுத்திய சகோதரி நிரோ சங்கர், மகள் நிஷா, மகன் மைக்கேல், கிறிஸ்டோபர் ஆகியோருக்கு நன்றி. தேவனுக்கே மகிமை !



பார்வையற்றோர், தொழுநோயாளர், ஏழைகளுக்கு உணவு வழங்கி தேவனை மகிமைப் படுத்தினார்கள்.



**Return Requested:** Tamil Village Gospel Mission
100 - Village,
Somarasampettai, Trichy - 620 102. India.